REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 24 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

வரு. 88 இல. 305 | December 24, Thursday, 2020 | 28பக்கங்கள் | 30/-




## சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நத்தார் விழாவை கொண்டாடுவோம்

### யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் கோரிக்கை



ஆடம்பரங்களைத் தவிர்த்து, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நத்தார் விழாவை கொண்டாடுவோமென்று, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வருட நத்தார் தினம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், வழமையாக எத்தனையோ ஆடம்பரங்களுடனும் எத்தனையோ விதமான களியாட்டத்துடனும் நத்தார் விழாவை கொண்டாடுவது தான் வழக்கம் என்றார்.

ஆனால், இவ்வருடம் அப்படியான ஆடம்பரங்களோடு செய்ய முடியாவிட்டாலும், அவற்றிலே தாங்கள் பயன்படுத்துகின்ற பல்வேறுவிதமான தேவையில்லாத செலவுகளை, ஆடம்பரங்களைத் தவிர்த்து,

06

பண்டிகை காலத்தில் வெளிச்செல்ல அனுமதியில்லை;

## தனிமைப்படுத்தல் பகுதிகளில் கடுமையான கட்டுப்பாடு

### கண்காணிப்பில் விசேட பொலிஸ் குழுக்கள்



தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் அந்த பகுதிகளை விட்டு எந்தக் காரணத்துக்காகவும் செல்ல முடியாது. அவ்வாறு செல்வது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பான செயற்பாடாகும். இந்நிலையில், இந்த பகுதிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக விசேட பொலிஸ் குழுவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

06

ஆயிரம் ரூபா சம்பளம் என்பதில் மாற்றமில்லை;

## இறுதி தீர்மானம் மேற்கொள்ள தோட்டக் கம்பனிகளுக்கு காலக்கெடு



2021 வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாவரை அதிகரிப்பது தொடர்பான இறுதி தீர்மானம் மேற்கொள்ள தோட்டக் கம்பனிகளுக்கு ஒருவார காலம் வழங்குவதற்கு தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தீர்மானித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பாக தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, இரண்டு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்தே அமைச்சர் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

குறித்த கலந்துரையாடலின்போது, தோட்ட கம்பனி சம்மேளன பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

தொழிலாளர்கள் நாளாந்தம் மேலதிகமாக 2 கிலோ கொழுந்து பெற்றுத்தர வேண்டும். அத்துடன் தொழிலாளர்கள் தொழிலில் இருந்து விட்டுச்செல்லும் போது வழங்கும் தொழிலாளர் பணிக்கொடையை வழங்குவதற்கு அவர்கள் போதுமானளவு நாளாந்த கடமையை மேற்கொள்வதில்லை. அதனால் தொழிலாளர்கள் அனைவரும் வருடத்துக்கு 180 நாள் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றமை கட்டாயமாக்கப்படவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

கொரோனாவால் இறப்பவர்க … ;

## மாத இறுதிக் … ன முடிவு ஏற்படு … க




### பேச்சுவார்த்தையூடாக தீர்வு காண்பதே எனது நிலைப்பாடு என்கிறார் நீதியமைச்சர்



**ஷம்ஸ் பாஹிம்**

கொரோனா வைரஸால் மரணிப்பவர்களை புதைக்கும் விவகாரத்திற்கு தீர்க்கமான முடிவு காணப்பட வேண்டுமென நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

காலி நீதிமன்ற கட்டடத் தொகுதி பணிகளை பார்வையிடுவதற்காக அமைச்சர் நேற்று காலிக்கு விஜயம் செய்திருந்தார். இதனை தொடர்ந்து கொரோனா பரவலினால் மரணிப்பவர்களின் சடலங்களை பாதுகாத்து வைக்கும் விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

கொரோனா மாரணங்களை புதைப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. மருத்துவர்கள், நிபுணர்கள் போன்றோரின் கருத்தை பெற்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தையூடான சாதகமான முடிவின் நிலைபாட்டிலேயே நான் இருக்கிறேன்.

கொரோனா பரவலினால் மரணிப்பவர்களின் சடலங்களை குளிர் அறைகளில் வைப்பது தொடர்பில் பிரச்சினையிருந்தால் சுகாதார அமைச்சு அது தொடர்பில்

06



கொரோன மரணங்களை புதைக்கும் விவகாரம்.

### நிபுணர் குழு – சுகாதார அமைச்சர் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு

03

கூட்டமொன்றில் கலந்துகொண்டவருக்கு கொரோனா;

## அமைச்சர் சீ.பி, ஜீவன் உட்பட பலரும் சுயதனிமைப்படுத்தலில்!





அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ரமேஷ்வரன் மற்றும் நிமல் பியதிஸ்ஸ ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் கலந்து கொண்ட கூட்டங்களில் கொரோனா தொற்றுக்குள்ளான அக்கரபத்தன பிரதேச சபை தலைவர் கலந்து கொண்டமையினால்

06

பாணந்துறை ஆடை தொழிற்சாலை;

## 80 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது



பாணந்துறை ஹொரணை வீதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் கொரோனா தொற்றாளர்கள் பலர் கண்டறியப்பட்டதுடன் குறித்த ஆடைத் தொழிற்சாலையை

06



ஊர்காவற்றுறையில் நிர்மாணிக்கப்பட்ட வணிக கப்பற்றுறை செயலக உப அலுவலக கட்டட தொகுதி, 'Slipway' கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேவர்தன, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் அங்கஜன் இராமநாதன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்க அதிபர் ஆகியோரால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்ட போது.

கொரோனாவில் மரணமடையும் முஸ்லிம்களின்

## உடல்களை தகனம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்




கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

பொரளை மயானத்திற்கு முன்பாக நேற்று காலை குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

கட்டுப்பாட்டு விதிமுறைகளுடன்

## ஜல்லிக்கட்டு நடத்த தமிழக அரசு அனுமதி

2021ஆம் ஆண்டில், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்த கட்டுப்பாடுகளுடன் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஜல்லிக்கட்டு விளையாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்க, தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொரு வருடமும் தை மாதத்திலிருந்து அந்த

06

## Z – Score தொடர்பிலான மனு உயர் நீதிமன்றால் தள்ளுபடி

### விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாதிருக்க உத்தரவு



2019 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் பல்கலைகழக வெட்டுப்புள்ளியின் (Z Score)

மனுக்களை விசாரணைக்கு உட்படுத்தாமல் தள்ளுபடி செய்ய உத்தர விடப்பட்டுள்ளது.

## புரவி புயலினால் வன்னியில் ஏற்பட்ட பாதிப்புக்கு உரிய நிவாரணம் இல்லை

### மீனவர், விவசாயிகள் சார்பாக பிரதமருக்கு செல்வம் எம்.பி அவசர கடிதம்



வன்னி மாவட்டத்தில் ஏற்பட்ட புரவி புயலினால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உடனடியாக இழப்

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம்

## முகக்கவசம் அணியாது தொழுகையில் ஈடுபாடு

### 50 பேர் சுயதனிமைப்படுத்தலில்



முகக்கவசம் அணியாது கம்பளை நகரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில்